DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.311/2025

Deposition of witness:PW1

| Name | யுவராஜ் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | பலராமன் | Village | |
| Age | 46 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **10.07.2026.** | | | |

**(Accused present)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

28.02.2024, 24.04.2024 மற்றும் 26.04.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் எனக்கும், சேகருக்கும் இடையேயானவை என்றால் சரிதான். மேற்படி **3** பரிவர்த்தனைகளுக்கும், எதிரி தர்மராஜுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். **2024, 2025** ஆம் ஆண்டுகளில் பணப்பரிவர்த்தனை நடைபெற்றதாக எனது வருமானவரி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சேகரும், நான் கிரைய உடன்படிக்கை செய்து கொண்ட சேகரும் ஒரே நபர் தான் என்றால் சரிதான். ம.த.சா.ஆ**– 31** வருமான வரி பரிவர்த்தனை பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களும் எனது தொழில் சார்ந்த பரிவர்த்தனை விவரங்களும் ஒன்றுதான் என்றால் சரிதான். **23.10.2023**க்கு பிறகு **12.12.2023**ல் மேற்படி கிரைய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து சம்பந்தமான சட்டப்பூர்வ கருத்துரை பெற்றேன் என்றால் சரிதான். சேகரும் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தான் எங்களுக்குள்ளான மேற்படி கிரைய ஒப்பந்த உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு எனக்கும், சேகருக்கும் இடையே மேற்படி கிரைய ஒப்பந்த உடன்படிக்கை தொடர்பாக எவ்வித பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணைஇல்லை.**

**(ஒம்) S.கீதா,**
**நீதித்துறை நடுவர் எண்–I**
**பண்ருட்டி.**

**/உண்மை நகல்/**

**நீதித்துறை நடுவர் எண்–I**
**பண்ருட்டி.**